## டிசம்பர் -19

**"ஆயுதம் தரித்திருக்கிறவன், ஆயுதம் உரித்து போடுகிறவனைப்போலப் பெருமை பாராட்டலாகாது."       - 1இராஜா 20.11.**

தெரிந்து கொள்ளப்பட்டிருக்கிற சபை உட்படுத்தப்பட்டிருக்கிற சகிப்புத் தன்மையின் பரீட்சை நிச்சயமாகவே, உண்மையாயிருத்தலின் சோதனைகளில் கடினமானதொன்றாக இருக்கிறது. இது மற்றெல்லா, காருணியம், குணசீலம் இவைகளின் பலத்தை மதிப்பிடுகிறதும், பதிவு செய்கிறதுமான பரீட்சையாயிருக்கிறது. இந்தச் சோதனைக்கு நிற்காத எந்தச் சிலுவையின் போர் சேவகனும் வெற்றி மாலையால் சூடப்படமாட்டான். மற்ற போர்களில் இருக்கிறதைப்போல, இந்த நாளின் போரிலும், விரோதியின் முயற்சி கர்த்தருடைய ஜனங்களை திடுக்கிடச் செய்வதும், திடீரெனத் தாக்குதலும் வெற்றி கொளுவதுமாகும். ஆகையால், இப்படிப்பட்ட அவசர நிலைக்காக எடுக்கக்கூடிய ஒரே ஆயுதம் தொடர்ந்து விழிப்புள்ளவர்களாயிருந்தாலும், ஜெபமும், சத்தியமும், சத்தியத்தின் ஆவியுமாகிய தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தைத் தரித்துக் கொளுவதுமாகும்.       **- Z 94, 155 (R 1656).**

கர்த்தருடைய ஜனங்கள் கர்த்தருக்குள் மேன்மைபாராட்டும் பொழுது, பெருமைப்படுதல் அவர்களுக்கு அநுசிதமானதாயிருக்கிறது. ஏனென்றால், அது தற்புகழ்ச்சியை விடக் குறைவானதல்ல. சில வேளைகளில், கடந்த காலங்களில் நாம் செய்திருக்கிற அரும்பெரும் செயல்களைக் குறித்து அடக்கமாகப் பேச நியாயமிருக்கலாம். ஆனால் ஒருபொழுதும், பெருமைப்படுத்திப் பேசக்கூடாது. நிச்சயமில்லாத இனி செய்யப்படும் காரியங்களைக் குறித்து ஜம்பமடித்துக் கொள்ளுவது ஒழுங்கானதல்ல, இப்படிப்பட்ட பெருமைப்படுதல், தன்னை மேன்மைபடுத்துகிறதும், சாதாரணமாக மற்றவர்களைக் குறைவுபடுத்தி பேசுகிறதும், கிட்டத்தட்ட ஒரே ரீதியாக தேவனை அவமதிக்கிறதுமாயிருக்கிறது. பெருமைப்படுகிறவன் சாதாரணமாக நன்மை செய்யத் தவறிப் போகிறதுமல்லாமல், சாதாரணமாக நாசத்தையும் அடைகிறான். நம்மில் பெருமை கொள்ள இடமே இல்லை. நாம் பெற்றுக்கொள்ளாதது எது நம்மிடமுள்ளது? பிச்சைக்காரன் தான் பெற்றுக்கொள்கிற பிச்சைக்காகப் பெருமை கொள்ளலாமா? நாம் பெற்றுக்கொண்டிருக்கிற நன்மைகள் கர்த்தருடைய கிருபையினாலல்லவோ? ஆகையால் நம்முடைய அந்தஸ்திற்காகவும், நாம் அடைந்திருக்கிறவைகளுக்காகவும் அவரை மகிமைப்படுத்த ஆர்வமுள்ளவர்களாயிருந்து, அவருடைய நன்மைக்கும், அன்புக்கும் பாத்திரமற்ற பொருள்களாக நம்மையே நினைப்போமாக.       **- P 35, 172.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**நீதி 27.1, ஏசா 10.15, சங் 49.6-9, 52.1, 94.4, ரோம 3.27, 11.17-21, 1கொரி 1.17-31, 4.6-7, 2கொரி 10.12-17, எபே 2.8-10.**

**கோபுர வாசிப்பு : Z 94, 155 (R 1656).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் தற்பெருமை பாராட்டினேனா? எப்படி? ஏன்? பலன்கள் எவை?**